இம்முன்னாள் உறுப்பினரது மறைவால், அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. தகவல் கோரல்

காவேரி மேலாண்மை ஆணையத்தின் முதல் கூட்டம் நடைபெறுவதையொட்டி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். காவேரி பிரச்சினையில் நீண்ட, நெடிய காலம் போராடி, பல்வேறு பிரச்சினைகளைப் பார்த்து, இறுதியிலே காவேரி மேலாண்மை ஆணையத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைத்து, ஒவ்வொரு மாநிலத்தின் சார்பிலும் அதற்கு நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களை நியமித்து, அதனுடைய முதல் கூட்டம் இன்று நடைபெறுகிறது. அந்தக் கூட்டம் நல்ல முறையிலே நடைபெற்று, நமக்கு நன்மை பயக்க வேண்டுமென்ற என்னுடைய வாழ்த்தினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இவ்வளவு பிரச்சினைகளுக்குப் பிறகும், உச்ச நீதிமன்றம் தலையிட்டதற்குப் பிறகு முடிவு வந்திருக்கிறது. நமக்கு இதிலே சில இழப்புகள்கூட ஏற்பட்டிருக்கின்றன, இல்லையென்று நான் சொல்லவில்லை. தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டதில், 14.75 டி.எம்.சி. தண்ணீர் நம்மைவிட்டுப் போயிருக்கிறது. கடைசியில் மிச்சம் இருக்கின்ற தண்ணீராவது நமக்கு ஒழுங்காக வந்து சேர்ந்தால் பரவாயில்லை என்ற நிலைமைக்கு விவசாயிகள் வந்திருக்கிறார்கள்.*

எனவே, அதையாவது இந்தக் கூட்டம் இன்றைக்கு உறுதி செய்ய வேண்டும். அதற்காக நம்முடைய மாநிலத்தின் சார்பில் சென்றிருக்கிறவர்கள் அங்கே வாதாட வேண்டும். அதற்கான வழிமுறைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

இரண்டாவது, அங்கு அபரிமிதமான மழை பொழிகிறது. அந்த மழைத் தண்ணீரையெல்லாம் காட்டி, நமக்குச் சேர வேண்டிய தண்ணீரைக் கொடுத்துவிட்டோம் என்ற ஒரு கணக்கைச் சொல்வார்கள். அதையும் நாம் உஷாராக இருந்து, நம் பங்கு என்பது வேறு, பருவமழை கொட்டி தீர்த்ததால் வந்த தண்ணீர் வேறு என்பதைப் புரியவைத்து, நமக்குள்ள பங்கினைச் சரியாக வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக, சுமுகமான ஒரு நிலை உருவாக வேண்டும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்துவிட்டு வந்த பிறகு, ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்திலே பல்வேறு பிரச்சினைகளைப் பேசியிருக்கிறார்கள். அதாவது, 'உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் முறையிடுவோம், "Scheme"—ஐப் பற்றி விளக்கம் கேட்போம். இந்த "Scheme"—ஐ பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்' என்று பழைய பல்லவிகளைப் பாடியிருக்கிறார்கள். இது நடைமுறைக்கு வருமானால், மீண்டும் மிகப் பெரிய பிரச்சினையை நாம் சந்திக்க வேண்டியிருக்கும். ஆகையினால், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

முற்பகல் 10—05

இப்படிப்பட்ட நிலையில் நாம் என்ன செய்யலாம் என்பது குறித்து, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். கர்நாடக முதல்வர் அவர்கள் இப்படிப்பட்ட பழைய பல்லவியை பாடிக்கொண்டிருக்கிற காரணத்தால், நாமும் அதை எதிர்கொள்ளும் வகையில், ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, நம்முடைய நிலைப்பாட்டை நிலைநிறுத்துவோம். கர்நாடக முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னாலும் சரி, வேறு யார் என்ன சொன்னாலும் சரி, தமிழ்நாட்டின் உரிமைக் குரலை நிலைநாட்ட நாம் ஒன்றுபட்டிருக்கிறோம் என்பதை மக்களுக்குத் தெரிவிப்பதற்காக, சர்வ கட்சிக் கூட்டத்தை

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்ட வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி விவாதிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, உச்ச நீதிமன்றம் தெளிவான தீர்ப்பைக் கொடுத்திருக்கின்றது. குறிப்பிட்ட ஆண்டுகள் வரை, 15 ஆண்டுகள் வரை இந்தத் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்று உறுதியான தீர்ப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். அதோடு, இதனுடைய செயல்பாடு பற்றியும் தெளிவாக அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. காவேரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட வேண்டும்; காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட வேண்டும்; இந்த ஆணையத்தில் எத்தனை பேர் உறுப்பினர்களாக இடம் பெறுகின்றார்கள்; மத்திய அரசின் சார்பாக எத்தனை பேர், மாநில அரசின் சார்பாக எத்தனை பேர் என்றெல்லாம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதோடு, காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவில் எவ்வளவு உறுப்பினர்கள் இருக்க வேண்டுமென்ற விவரங்கள் எல்லாம் தெளிவாகப் பட்டியலிடப்பட்டு, அதனடிப்படையிலே மத்திய அரசு அந்தக் குழுவை நியமித்துவிட்டது. காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டும் அமைக்கப்பட்டுவிட்டன.*

மத்திய அரசு, சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு யார், யாரை உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதனடிப்படையிலே, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநில அரசுகள் தங்களுடைய பிரதிநிதிகளின் பெயர்களை முதலில் வழங்கியது; கர்நாடக அரசு வழங்காமல் இருந்தது. மத்திய அரசு அதன் உறுப்பினர்களை நியமித்தது. உடனடியாக, கர்நாடக அரசும் தன்னுடைய பிரதிநிதிகளின் பெயர்களை ஆணையத்திற்கும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவிற்கும் அளித்தது. ஆகவே, இப்போது குழு அமைக்கப்பட்டுவிட்டது. அந்தக் குழு செயல்பட ஆரம்பித்துவிட்டது. இன்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்

சொன்னதுபோல, நீண்ட நெடிய நாட்களாகப் போராடி, கொண்டு வரப்பட்ட காவேரி மேலாண்மை ஆணையத்தின் முதற் கூட்டம், அதற்கு வடிவம் கொடுக்கின்றவிதத்திலே இன்றைய தினம் நடைபெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற அம்சங்கள் எல்லாம் இன்றைக்கு பேசி தீர்க்கப்படும். அதனால்தான் நம்முடைய அரசின் சார்பாக செல்லக்கூடிய பிரதிநிதிகள், மூத்த அமைச்சர்கள், டெல்டா பாசனப் பகுதி அமைச்சர்கள், உயரதிகாரிகள் மற்றும் நம்முடைய அரசு வழக்கறிஞர்களை எல்லாம் அழைத்துப் பேசி, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு எந்தெந்த வகையிலே நமக்குச் சாதகமாக இருக்கின்றது; அதுமட்டுமல்ல, அந்த ஆணையம் எவ்வாறு செயல்பட வேண்டுமென்ற விவரங்களை எல்லாம் கேட்டறிந்து, நாம் எப்படிச் செயல்பட வேண்டுமென்ற ஓர் ஆலோசனையையும் அவர்களுக்குச் சொல்லி அனுப்பியிருக்கின்றோம். ஆணையத்தின் முதல் கூட்டம் நடைபெறுகின்றது. அந்த முதல் கூட்டத்திலே என்னென்ன பேசப்பட்டது என்ற விவரம் தெரிந்த பிறகு, நாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

அதுமட்டுமல்ல, இப்பொழுது கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடரப் போவதாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலே நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்காக நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கான 177.25 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. அந்த அடிப்படையிலேதான், நமக்கு ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட அளவு தண்ணீர் வழங்க வேண்டுமென்று அதிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, ஒவ்வொரு முறையும் இந்தக் குழுக்கள் 10 நாட்களுக்கு ஒருமுறை கூடி, எவ்வளவு தண்ணீர் வருகின்றது என்பதையெல்லாம் ஆய்வு செய்து, அதனடிப்படையிலே நமக்கு தண்ணீரை வழங்கவிருக்கின்றார்கள் என்பதையும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, இதையெல்லாம் பொறுத்திருந்து பார்க்கலாம். மத்திய அரசு, காவேரி மேலாண்மை ஆணையம்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூலை 2

மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி செயல்படுகின்றதா என்ற விவரம் தெரிந்த பிறகு, நாம் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அதற்குத் தேவையான மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–10

3. கவன ஈர்ப்பு

களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் இடைத்தாங்குப் பகுதிகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆஸ்டின், திரு. என். சுரேஷ் ராஜன், திரு. த. மனோ தங்கராஜ், திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. செ. ராஜேஷ் குமார், திரு. வி.எஸ். காளிமுத்து, திரு. எச். வசந்தகுமார், திரு. ஆர். கணேஷ் மற்றும் திரு. ச. பாண்டி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின். ஒரு கேள்வியை நீங்கள் கேட்கலாம்; காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருவர் ஒரு கேள்வி கேட்கலாம்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் இடைத்தாங்குப் பகுதிகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.